செ.வெ.எண்: 32 நாள்: 12.01.2017

# பொதுமக்கள் பணமில்லா பரிவர்த்தனை மேற்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பி.எஸ்.எம் திருமண மண்டபத்தில் நபார்டு வங்கி, ஜி.வி.என் நிறுவனத்துடன் இணைந்து நடத்திய நிதிசார் கல்வி விழிப்புணர்வு மற்றும் ரொக்கமில்லா பணபரிவர்த்தனை விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 11.01.2017 அன்று நடைபெற்றது.

இந்த பணத்தாள் இல்லா விழிப்புணர்வு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

பொதுமக்களிடையே பணத்தாள் இல்லா பணப்பரிமாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நமது மாவட்டத்தில் உள்ள அன்னவாசலில், விழிப்புணர்வு முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வு முகாமின் நோக்கம் பொதுமக்கள் அனைவரும் சிறுசேமிப்பின் முக்கியத்துவத்தினை உணர வேண்டும் என்பதே ஆகும். எந்த ஒரு குடும்பமும் வாழ்க்கை சுழற்சிக்கு ஏற்ப திட்டமிட்டு சேமிக்கிறதோ, அந்த குடும்பமே வளர்ச்சியை நோக்கி செல்லும். கிராம மக்கள் தனியார் நிதிநிறுவனங்களின் அதிகப்படியான வட்டி கிடைக்கும் என்று ஆசைப்படுவதை தவிர்க்க வேண்டும். ஏழை எளிய மக்கள், தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை வங்கி மற்றும் அஞ்சலகங்களில் சேமிக்க வேண்டும். தங்களின் சேமிப்பை அடிப்படையாகக் கொண்டு, சரியான சிறு தொழில் திட்டத்துடன் நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலுள்ள வங்கி மேலாளரை அணுகி சிறுகடன் பெறலாம். வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் பெற்ற சிறுகடனை, சரியான நேரத்தில் வங்கிக்கு திருப்பி செலுத்தும் போது, தங்களின் சிறுதொழிலை விரிவுபடுத்தும் வகையில் மேலும் வங்கிக்கடன் பெறலாம். மேலும், சரியாக கடனை திருப்பி செலுத்தும் நபர்களுக்கு, கூட்டுறவு சங்கங்கள் வட்டியில்லா பயிர்க்கடன்களை கொடுக்கிறது. கிராம மக்கள் பணம் கொடுத்து பொருட்கள் வாங்குவதற்கு பதிலாக, பணமில்லா பரிவர்த்தனை செய்திட பொதுமக்களாகிய நீங்கள் முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இவ்விழிப்புணர்வு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணிமில்லா பரிவர்த்தனை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சமூக பாதுகாப்பு திட்டங்கள் குறித்தான துண்டுபிரசுரங்கள், ரிசர்வ் வங்கியின் நிதிசார் கல்வியறிவு குறித்தான டைரி மற்றும் புதிதாக வங்கிக்கணக்கு துவங்கியுள்ளோருக்கு வங்கி கணக்கு புத்தகங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கினார். மேலும் கனரா வங்கியின் மூலம் அன்னை தெரசா மகளிர் குழுவினருக்கு ரூ.2 இலட்சம் மதிப்பில் கடனுதவியும், மந்தையம்மாள் மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு ரூ.1.7 .இலட்சம் கடன் உதவியும் என ரூ.3.7 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திட்ட மேலாளர் (நபார்டு வங்கி) திரு.சோமசுந்தரம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.சுலைமான், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, வங்கியாளர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**